**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்.**

**முன்னிலை : க. முனுசாமி, எம்., எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., எம்.பில்., எம்.பி.ஏ.,**

**ந.க.எண். 1232 / டிசி4 / பமேகு / ஒபக / 2022 ,நாள் : 22. 11. 2022.**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு

**பார்வை:** பள்ளிக்கல்வி ஆணையர் , தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.2223 /C7 / பமேகு / ஒபக/ 2022 நாள்: 21.07.2022

**********

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம், மாதந்தோறும் இறுதி வெள்ளிக்கிழமை கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெற்று வருகிறது. **இம்மாதம் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் 25.11 .2022 (வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 3:00 மணி முதல் 4.30 மணி வரை நடத்த அறிவுறுத்தப்படுகிறது**

இந்திய அரசமைப்பு தினம் நவம்பர் 26 ஆம் நாள் கொண்டாட இருப்பதால், நவம்பர் 25 ஆம் நாள் நடக்க இருக்கும் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டத்தில் **இணைப்பு–2 ல் கொடுக்கப்பட்டுள்ள இந்திய அரசமைப்பு நாள் உறுதி மொழியை** அனைத்து உறுப்பினர்களும் எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் வருகைப்பதிவு.**

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் வருகைப்பதிவினை **தலைவர் மட்டுமே பெற்றோர் செயலியில் (TNSED Parent App)** கூட்டம் நடைபெறும்போது பதிவு செய்தல் வேண்டும். தலைவர் தங்களது கைபேசி அல்லது பிற உறுப்பினர்களின் கைபேசி மூலமாக வருகைப்பதிவினை பதிவு செய்வதை தலைமையாசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

**பள்ளி மேம்பாட்டுத் திட்டம்.**

பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கவும் அதை முழுமையாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவரவும் இதற்கெனப் பள்ளி மேலாண்மைக் குழு தொகுதியைப் (SMC Module) பெற்றோர் செயலியில் (TNSED Parent App) ஒரு பகுதியாகப் பள்ளிக் கல்வித் துறை பயிற்சியின் வாயிலாக அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்திலும் , குறைந்த அளவு எண்ணிக்கயிலான பள்ளிகளில் மட்டுமே திட்டமிடுதல் சார்ந்து செயலியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என அறியப்பட்டுள்ளது . **எனவே, பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் இச்செயலியின் வாயிலாக திட்டமிடுதல் மேற்கொள்வதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.** இச்செயலி சார்ந்த முக்கியத்துவத்தை அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் மாவட்ட கள அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தொடக்கநிலை), வட்டாரக் கல்வி அலுவலர்கள் (APO, DEO, BEO, DC, DIET faculty,

BRTEs) பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள்**

**1. இடைநிற்றலுக்கு அதிக வாய்ப்புள்ளகுழந்தைகள்**

- ❖ இடைநிற்றலுக்கு அதிக வாய்ப்புள்ள குழந்தைகள் (Potential Dropout) தொடர்பாக EMIS தரவினை குடியிருப்பு வாரியாகத் தொகுத்து அவர்களைப் பள்ளிகளில் சேர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சார்ந்து கலந்தாலோசனை செய்யப்படுதல் வேண்டும்.
- ❖ தொடர்புகொள்ள இயலாத நிலையில் உள்ள குழந்தைகளின் தகவல்களை இல்லம் தேடிக்கல்வி தன்னார்வலர்களிடம் வழங்கி, அவர்கள் மூலம் அக்குழந்தைகள் பள்ளிக்கு மீண்டும் வருவதை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**2. இல்லம் தேடிக் கல்வி – ஆசிரியர் மற்றும் தன்னார்வலர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்.**

- ➢ **தொடக்கநிலை தன்னார்வலராக இருப்பின்** : குறைதீர் கற்பித்தல் குறித்தும், மாணவர்களின் கற்றல்நிலை குறித்தும் தன்னார்வலரும் , ஆசிரியரும் கலந்துரையாட வேண்டும்.
- ➢ **உயர் தொடக்கநிலை தன்னார்வலராக இருப்பின்** : மையங்களில் அதிக கவனம் தேவைப்படும் குழந்தைகளின் விவரங்களை தன்னார்வலர் ஆசிரியரிடம் கேட்டறிந்து அவர்களை குறித்துக்கொள்ள வேண்டும்
- ➢ தன்னார்வலர்கள் இல்லம் தேடிக் கல்வி மையத்திற்கு தொடர்ச்சியாக வருகை தராத குழந்தைகளின் பெயர்களை , ஆசிரியரிடம் பகிர்ந்து கொண்டு , அக்குழந்தைகளை தொடர்ச்சியாக மையத்திற்கு வர ஆசிரியர் வழியே ஊக்கப்படுத்த வேண்டும்.
- ➢ பள்ளி மேலாண்மைக் குழு க்கூட்டத்தின் போது இது தொடர்பான தகவல்களை பகிர்ந்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**3. மேல்நிலைப் பள்ளி – மாணவர்களின் உயர்கல்வி ஆலோசனை**

28.10.2022 அன்று நடைபெற்ற மாணவர்களின் கூட்டதிற்கு பிறகு பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 8457 மாணவர்கள் உயர்கல்விக்கு சென்றுள்ளார்கள் என கண்டறியபட்டுள்ளது. மீதமுள்ள மாணவர் களில் உயர்கல்வி தொடராத மாணவர்களின் காரணங்கள் கண்டறியப்பட்டு 1957 மாணவர்களுக்கு உய ர்கல்விக்கான உதவிகளை மாவட்ட ஆட்சியர்களின் வழிகாட்டுதலில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

உயர்கல்வி துறையின் ஒத்துழைப்புடன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலி இடங்கள் கண்டறியப்பட்டு, வருகிற 18.11.2022 வரை நீடிக்கப்பட்டுள்ள சேர்க்கையில் மாணவர்கள் சேர்ந்து பயன்பெற அறிவுறுத்தப்பட்டுள்ளனர் . தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாத 4007 மாணவர்களை பள்ளி மேலாண்மைக்குழு மாவட்ட கருத்தாளர்கள் மூலம் கண்டறிந்து ஒரு வார காலத்தில் அவர்களின் தரவுகள் சேகரிக்கப்படும். அவ்வாறு கண்டறியப்பட்ட மாணவர்களுக்கான தொடர் வழிகாட்டுதல்கள் வழங்கப்படவுள்ளது.

**4. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான உள்ளடக்கிய கல்வி**

மாற்றுத் திறன் மாணவர்களின் திறமைகளைக் கண்டறிய **இணைப்பு–3 ல்** செயல்பாடுகள் மற்றும் எடுக்க வேண்டிய உறுதிமொழியும் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே பள்ளி மேலாண்மைக்குழு கூட்டதில் தலைமை ஆசிரியர் இச்செயல்பாடுகள் மற்றும் உறுதிமொழியை அனைத்து உறுப்பினர்கள் எடுத்துக்கொள்வதையும் இதற்கான தீர்மானங்களை வழிமொழிந்து பதிவே ட்டில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்

**5. கலை மற்றும் கலாச்சாரம் – கலை அரங்கம் மற்றும் கலை திருவிழா**

- பள்ளியில் கலை அரங்க செயல்பாடுகள் பண்பாட்டு செயல்பாடுகள் தொடங்குவது சார்பு தீர்மானம் நிறைவேற்றப்படுவதை பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்ய வேண்டும். தேவைப்படும் போது / முடிந்தவரை காட்சிக் கலை, நாட்டுப் புறக்கலை, நாடகம் மற்றும் நடனம் ஆகிய அமர்வுகளுக்கான பொருட்களை வழங்க தேவையான முயற்சிகளை மேற்கொள்ள அறிவுறுதப்படுகிறார்கள்.
- இம்மாதம் 23 ஆம் தேதி முதல் பள்ளிகளில் கலைத் திருவிழா நடைபெற இருக்கிறது, இந்த நிகழ்விற்கு தேவைக்கேற்ப ஒத்துழைப்பை வழங்குவதற்கு பள்ளி மேலாண்மைக் குழுவினர் அறிவுறுதப்படுகிறார்கள்.

**6. குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிதல்:**

குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு வாரம் (நவம்பர் 18 முதல் 24 வரை) கடைப்பிடித்தல் தொடர்பாக பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படி பள்ளி குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் ஆலோசனை வழங்குதல் குழுவில் ( Students Safety Advisory Committee) உள்ள ஆசிரியர்கள் , தலைமையாசிரியர் மற்றும் உறுப்பினர்களுடன் கொடுக்கப்பட்ட சுயமதிப்பீட்டுப் படிவத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளை நவம்பர் 25 அன்று நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழுக்கூட்டத்தில் பகிர்ந்து கலந்துரையாடவும் மேலும் பள்ளிகளில் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கவும் அறிவுறுத்தப் படுகிறார்கள். குழந்தைகள் பாதுகாப்பு என்பது சமூகக்கடமை என்ற உணர்வை ஒவ்வொருவரும் பெறவேண்டியதன் அவசியத்தை SMC கூட்டத்தில் வலியுறுத்தலாம்.

**7. பழுதடைந்த மற்றும் பராமரிப்பற்ற நிலையிலுள்ள –** பள்ளி கட்டிடங்களை கண்டறிந்து அவற்றை மறுசீரமைப்பு செய்வதற்கான கலந்தாலோசனை செய்து தீர்மானங்கள் நிறைவேற்ற அறிவுறுத்தப்படுகிறது.

**8. போக்குவரத்து / பாதுகாவலர் வசதி** – போக்குவரத்து / பாதுகாவலர் வசதியுள்ள பள்ளிகளுக்கான செயல்பாடுகள் பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒத்துழைப்புடன் நன்முறையில் செயல்படுத்த வேண்டும்.

- ஒவ்வொரு மாதமும் நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் போக்குவரத்து/பாதுகாவலர் வசதி வழங்குதல் ஒரு கூட்டப் பொருளாக கலந்தாலோசிக்க வேண்டும்.
- போக்குவரத்து/பாதுகாவலர் வசதிக்கான தொகை வழங்குவதற் கு ஏதுவாக, வங்கி கணக்கு தொடங்கப்படாத மாணவர்களின் தகவல்களை கூட்டத்தில் பகிர்ந்து விரைவில் அவர்களுக்கான வங்கி கணக்கு தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க அறிவுறுதப்படுகிறார்கள்.

➢ செப்டம்பர் மாதம் 2022 வரை போக்குவரத்து /பாதுகாவலர் வசதிக்கான தொகை மாநில திட்ட அலுவலகத்திலிருந்து மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டு பள்ளி வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது, அதனை உரிய வாகன ஓட்டுநர்/பாதுகாவலருக்கு வழங்க ப் பட்டுள்ளதை பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் உறுதிசெய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் – பார்வையாளர்கள்: பங்கும் பொறுப்பும்.**

மாவட்ட மற்றும் வட்டாரக் கள அலுவலர்கள் (APO, DEO, BEO, DC, DIET faculty, BRTEs) , சிறப்பு பயிற்றுநர்கள், இயன்முறை பயிற்சியாளர்கள் மற்றும் TNEF Fellows, பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் கருத்தாளர்கள் – பார்வையாளர்களாக பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். பார்வையாளர்கள் பள்ளிகளுக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நாளன்று பிற்பகல் 2.00 மணியளவில் பார்வையாளர் பள்ளிக்குச் சென்றுவிட அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். பின்பற்ற வேண்டிய அனைத்து வழிமுறைகளையும், கூட்ட நிகழ்வையும் பார்வையாளர் முன்கூட்டியே அறிந்து வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.
2. பள்ளி மேலாண்மைக் குழு குறித்த ஊக்கமூட்டும் காணொலிகள் திரையிடப்படுவதை உறுதிசெய்வார்கள்.
3. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் முழுவதும் நடந்து முடியும்வரை பார்வையாளர் பள்ளியில் இருப்பார்கள்.
4. தேவைப்படும் பட்சத்தில் கூட்டம் சார்ந்த நிகழ்வில் பார்வையாளர் உறுதுணையாக இருப்பார்கள் (வருகைப் பதிவு, திட்டமிடல் செயலி சார்ந்த செயல்பாடுகளில்).
5. பார்வையாளருக்கென தரப்பட்டுள்ள படிவத்தை (Google Form) பூர்த்தி செய்து , கூட்ட நாளன்றே இரவு 8.00 மணிக்குள் சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

**காணொலிகள்.**

பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த சிறந்த செயல்பாடுகளுக்கான காணொலிகள் (Best Practices Videos), வருகைப் பதிவு மற்றும் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் சார்ந்த செயலியின் காணொலிகள் சார்ந்த இணைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. Attendance: https://bit.ly/SMCAppAttendance
2. Planning Part 1: https://bit.ly/SMCSDP1
3. Planning Part 2 : https://bit.ly/SMCSDP2
4. Planning Part 3: https://bit.ly/SMCSDP3
5. Playlist link: https://bit.ly/SMCSupportVideos

பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்காண் காணொலிகளை பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பகிர்வதை உறுதி செய்தல் வேண்டும். மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிறப்பான முறையில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தினை அனைத்து அரசு தொடக்கநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் சிறப்புடன் நடத்திட அறிவுறுத்துமாறு மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க நிலை) அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் , மேற்பார்வையாளர்(பொறு) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு 1** : பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நிகழ்வுகள்.
**இணைப்பு 2** : இந்திய அரசமைப்பு நாள் உறுதிமொழி.
**இணைப்பு 3** : மாற்றுத்திறனாளி மாணவர்களை கொண்ட ஒருங்கிணைந்த பள்ளிகளை உருவாக்குவதற்கான உறுதிமொழி.

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
**வேலூர் மாவட்டம்.**

24/11/2022

**பெறுநர் –**

1. சார்ந்த அனைத்து அரசு பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் ( உரிய வழியாக).
2. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு).
3. மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க நிலை), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு).
4. வாட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
5. மேற்பார்வையாளர்கள் (பொ) வேலூர் மாவட்டம்.

**நகல் –**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர், இராணிப்பேட்டை (DIET) – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.

## இணைப்பு – 1

## பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நிகழ்வுகள்

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:00 3:05 | **ஊக்கமூட்டும் காணொலிகள்** | **செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் / சிறப்பாக செயல்படும் பள்ளி மேலாண்மைக் குழு கணொலிகளை திரையிட வேண்டும்** | **5 நிமிடங்கள்** |
| 3:05–3:15 | பள்ளி வளாகத்தைப் பார்வையிடுதல் | ஒவ்வொரு கூட்டமும் ஆரம்பிக்கும் முன்னர் குழு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பள்ளி வளாகம் , வகுப்பறை, கழிவறை, குடிநீர் வசதிகள் , சமையல் அறை , சமையல் பொருட்கள் வைப்பறை, நூலகம் மற்றும் தேவைப்பட்டால் விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை பார்வையிடுதல் சிறப்பு. | 10 நிமிடங்கள் |
| 03:15–03:20 | வருகைப் பதிவு | அனைத்து உறுப்பினர்களின் வருகையை கைப்பேசி செயலியில் தலைவரால் பதிவு செய்யப்பட வேண்டும் | 5 நிமிடங்கள் |
| 03:20–03:25 | வரவேற்பு | தலைமையாசிரியர் அனைவரையும் வரவேற்றுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தல். | 5 நிமிடங்கள் |
| 03:25–03:30 | இந்திய அரசமைப்பு நாள் உறுதிமொழி | தலைமையாசிரியர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். | 5 நிமிடங்கள் |
| 03–30 03:40 | இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின் பங்கேற்பு(தொடக்கநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ) | பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும் நாள் அன்று 3 இல்லம் தேடிக் கல்வித் தன்னார்வலர்களை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து அவர்கள் சார்ந்த மையத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவு, கற்றல் அடைவு மற்றும் அடுத்த இரண்டு மாதத்திற்கான செயல் திட்டம் குறித்துக் கலந்தாலோசிக்க வேண்டும். | 10 நிமிடங்கள் |
| | உயர்கல்வி வழிகாட்டுதல் – மேல்நிலைப்பள்ளிகள் மட்டும் ( 5 நிமிடங்கள்) | கடந்த மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் மாணவர்களுக்கு தேவையான எதிர்கால உயர்கல்வி வழிகாட்டுதல் குறித்து கலந்தாலோசனை நடத்தப்பட்டதன் பின்னூட்டமாக எத்தனை மாணவர்கள் | |

| | | | |
|---|---|---|---|
| | | உயர்கல்வியில் சேர்ந்துள்ளார்கள் /சேர விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்பதை எடுத்துக்கூறி விருப்பம் தெரிவிக்காத மாணவர்களை உயர்கல்வியில் சேர்க்க செய்ய வேண்டிய நடவடிக்கைகளை கலந்தாலோசிக்க வேண்டும். | |
| 03:40–03:55 | திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் | ஒவ்வொரு மாதக் கூட்டமும் ஒரு கருப்பொருளைச் சார்ந்து கூட்டப்பொருள் தயாரித்தல்.<br>கூட்டத்தின் நோக்கத்தை தலைமையாசிரியர் எடுத்துக் கூறுதல்.<br>திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் (மேற்குறிப்பிட்டவாறு) சார்ந்து ஆலோசித்தல்.<br>முன்பே உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு பகிரப்பட்ட கூட்டத்தின் முக்கியக் கூட்டப் பொருட்களை வாசித்தல்.<br>அதனைத் தொடர்ந்து வேறு முக்கியத் தவிர்க்கவியலாதக் கூட்டப் பொருட்கள் ஏதேனும் இருப்பின் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்து சேர்த்துக் கொள்ளுதல்.<br>(முந்தைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஒவ்வொன்றாக வாசித்து அதன் தற்போதைய நிலை , முன்னேற்றம், சவால்கள்ஆகியவற்றை விவாதித்துத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்துத் தீர்மானித்தல்) | 15 நிமிடங்கள் |
| 03.55–04:25 | கூட்டப்பொருள் மீதான விவாதம்<br>தீர்மானங்களை செயலி மற்றும் பதிவேட்டில் பதிவுசெய்தல் மற்றும் கையொப்பம் பெறுதல் | முன்பே தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டப் பொருட்கள் ஒவ்வொன்றாகக் குழுவில் கலந்தாலோசித்து , விவாதித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.<br>மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியளவு, நிதி ஆதாரம், பொறுப்பாளர்கள், தொடர்புடையத் துறைகளின்ஒத்துழைப்பு, செயலை முடிப்பதற்கான கால அளவு ஆகியவற்றை நன்கு திட்டமிட்டுத் | 30 நிமிடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்மானங்களை நிறைவேற்றுதல்.<br>ஒருமனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டத் தீர்மானங்களைத் தீர்மானப் பதிவேட்டில்/செயலியில் பதிவு செய்து வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல். | |
| 04:25-04:30 | கூட்டம் நிறைவு செய்தல் | பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுதல். | 5 நிமிடங்கள் |

இணைப்பு - 2

# இந்திய அரசமைப்புச் சட்டம் - முகப்புரை

இந்திய மக்களாகிய நாம்,

இந்தியாவை இறையாண்மை வாய்ந்த, சமத்துவ,
மதச்சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக அமைக்கவும்,

அதன் குடிமக்கள் அனைவருக்கும்
சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் நீதியும்,
சிந்தனைச் சுதந்திரமும் அதன் வெளிப்பாட்டுச் சுதந்திரமும்
நம்பிக்கைகளை கைகொள்ளும் சுதந்திரமும், எதன்மீதும் ஆழ்ந்த
பற்றுறுதிகொள்ளும் சுதந்திரமும், வழிப்பாட்டுச் சுதந்திரமும்,

வாழ்நிலையிலும் வாய்ப்பிலும் சமத்துவமும்

அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் பாதுகாப்பை
உறுதிப்படுத்தவும், தனி ஒருவரின் மாண்புக்கும், நாட்டின்
ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உறுதியளிக்கும்
சகோதரத்துவத்தையும் அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும்,
உறுதியோடு தீர்மானிக்கப்பட்டு நம்முடைய அரசியலைப்பு
நிர்ணய சபையில்

இந்திய அரசியலமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி,
நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

இணைப்பு - 3

# SMC - November Agenda for CwSN

படம் 1:




<u>படம் 1- கலந்துரையாடல் குறிப்புகள்</u>

★ இந்தப் படத்தை பார்க்கும் பொழுது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?
( உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டும்)

அனைவரின் கருத்துக்களையும் கேட்ட பின், தலைமை ஆசிரியர் ஒரு சிறிய விளக்கம் கொடுக்கலாம்:

★ மாற்றுத் திறன் உள்ளவர்களும் பல திறமைகளை கொண்டவர்களே. ஆனால் பெரும்பாலும் மற்றவர்கள் அவர்களின் திறனை பார்க்காமல் குறையை மட்டுமே பார்ப்பதால், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்புகளும் சலுகைகளும் கிடைக்காமல் போய்விடுகிறது. எனவே, இதற்கான தீர்வாக SMC என்ன செய்யலாம் என்பதை பற்றி குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை முன்மொழிவர். பின்னர், இதற்கான தீர்மானங்களை முன்மொழிவர். இதனை பதிவேட்டில் பதிவு செய்வர்.

படம் 2:




<u>படம் 2 - கலந்துரையாடல் குறிப்புகள்</u>

நம் அனைவரின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டால் அது சமுதாயத்தின் ஏற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்து செயல்படுவோம் என உறுதிமொழி ஏற்போம்.

இந்த மாதத்திற்கான மாற்றுத்திறன் மாணவர்கள் சம்பந்தப்பட்ட செயல்பாடுகள்:

- ❖ நம் அக்கம் பக்கத்தில் உள்ள மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை கண்டறிதல் வேண்டும்.

- ❖ அவ்வாறு கண்டறியப்பட்ட குழந்தைகளை அருகிலுள்ள அரசு பள்ளியில் சேர்த்தல் வேண்டும்.
- ❖ நம் பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகள் அனைவரும் கண்டறியப்பட்டு பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனில், அடுத்தபடியாக, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் (ID card, etc) கிடைக்கப் பட்டுள்ளதா என்பதை அறிதல் வேண்டும்.
- ❖ பொதுத் தேர்வு அறிவிக்கப்பட்ட இந்நிலையில் மாற்றுத்திறனாளி மாணவர்க்ளுக்கு தேர்வு சலுகைகள் கிடைக்கப் பெறச் செய்வது அவசியமாகும். இதனையொட்டி அவரவர் பள்ளிகளில் எத்தனை மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தேர்வு சலுகைகள் பெறப்பட்டுள்ளது என்பதையும், இன்னும் எத்தனை மாணவர்களுக்கு பெற வேண்டும் என்பதையும் அறிந்து, அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

குழு உறுப்பினர்கள் இதுகுறித்து அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை செயலியில் குறிப்பிட வேண்டும். இதனை தலைமை ஆசிரியர் குழு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

இப்போது, மாற்றுத்திறனாளி மாணவர்கள் கொண்ட ஒருங்கிணைந்த பள்ளிகளை உருவாக்க, நாம் இந்த உறுதிமொழியை ஏற்போம்.

உறுதிமொழி :

தமிழக அரசு பள்ளியில் உள்ள சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் நலனுக்காகவும் எப்போதும் உடன் நிற்போம் என்றும், அவர்களுக்கு இருக்கக்கூடிய சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை உருவாக்க எங்களாலான அனைத்து முயற்சிகளையும் செய்வோம் என்றும் உறுதி கூறுகிறோம்.

முழுமையாகவும், சமத்துவத்துடனும் வெற்றிகரமாகவும் மாற்றுத் திறனாளி குழந்தைகள் இங்கு எந்தப் பாகுபாடும் இன்றி, அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்வதற்குரிய பாதுகாப்பை அவர்களுக்கு அளிப்பது இன்றியமையாதது என நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

அவர்களை எங்கள் குடும்பத்தில் ஒருவர் போலவே முக்கியத்துவம் அளித்து நட்புணர்வை வளர்ப்போம் என்றும் உறுதிமொழி ஏற்கிறோம்.